பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 30 வெள்ளிக்கிழமை (16.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 350

# தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியை அமெரிக்க அரசாங்கம் முடக்கியது

## புலிகளுக்கு இராணுவத் தளபாடங்கள் வாங்கியதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.16

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிகளை முடக்கவும் அதன் செயற்பாடுகளைத் தடை செய்யவும் அமெரிக்காவின் திறைசேரி நேற்று உத்தரவு பிறப்பித்தது.

பயங்கரவாதக் குழுக்களுக்கு நிதி உதவி செய்வதனை தடை செய்யும் 13224 ஆம் இலக்க நிறைவேற்று சட்ட விதிகளின் கீழ் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சகல செயற்பாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் திறைசேரியின் அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தர்மஸ்தாபனம் என்ற பெயரில் அமெரிக்காவில் 1997ஆம் ஆண்டில் பயங்கரவாத அமைப்பாகப் பிரகனடப்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு, நிதி திரட்டியது, அந்த நிதியை புலிகளின் இராணுவத் தளபாடக் கொள்வனவுக்குப் பயன்படுத்தியது ஆகிய செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருவதால் அதன் நிதி முடக்கப்படுவதாக அமெரிக்கத் திறைசேரி அறிவித்துள்ளது.

தர்மஸ்தாபனமாகவும், தொண்டர் நிறுவனமாகவும் பதிவு செய்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கமாகவே செயற்படுகிறது. அமெரிக்காவில் தனக்குக் கிடைக்கும் நிதி உதவிகளை விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள், தொடர்பு சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்திஉள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகளை முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளே கண்காணித்து வருகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் இயங்குகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் போரை முடிவுகட்ட வரவு - செலவுத் திட்ட நிதி

## தாய் நாட்டை முழுமையாக விடுவிக்க அதனைப் பயன்படுத்தப் போவதாக கூறுகிறார் ஜனாதிபதி



கொழும்பு,நவம்பர்16

வடக்கில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அதன் மூலம் தாய் நாட்டை முழுமையாக விடுவிக்கும் முயற்சிகளுக்கும் வரவு - செலவுத் திட்டத்தை பயன்படுத்தப் போகிறேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 'தருண அருண' வேலைத்திட்டத்தின் மூன்றாவது மாநாடு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் அங்கு பேசுகையில், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடமோ விடுதலைப் புலிகளிடமோ வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கும் ஆற்றறில்லை.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு அரசுசெய்யும் முயற்சிகளை நலிவுறச்செய்து அரசாங்கத்தை தோற்கடிக்கும் அவசியம் விடுதலைப் புலிகளுக்கு இருக்கின்றது. அதனை நிறைவேற்றுவதற்காக புலிகளின் தலைவர்கள் வெவ்வேறு சதிமுயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

ஆனால் அவர்கள் அதில் வெற்றிகாண முடியாது. அதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

வடக்கில் யுத்தத்தை முடிவுகட்டி தாய் நாட்டை முழுமையாக விடுவிக்கும் முயற்சிக்கு அடித்தளமாக வரவு - செலவுத் திட்டத்தைப் பயன்படுத்தப்போகின்றேன் - என்றார். (அ-5)

# விமானப் படை ஹெலி மன்னாரில் தரையிறக்கம்

மன்னார்,16

மன்னார் தாழ்வுப்பாடுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறக்கப்பட்டுள்ளது என செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நான்கு ஹெலிக்கொப்டர்கள் மன்னார் வான்பரப்பில் தொடரணியாகச் சென்றுகொண்டிருந்தன என்றும், அதில் ஒரு ஹெலிக்கொப்டர் திடீரென தரையிறங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஏனைய மூன்று ஹெலிக்கொப்டர்களும் வான்பரப்பில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன என்றும், இதன் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தரையிறக்கப்பட்ட ஹெலிக்கொப்டர் நேற்றிரவுவரை அந்தப்பகுதியில் இருந்து மேழெலவில்லை என்று கூறப்பட்டது.(சி)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பட்ஜெட்டை முழு அளவில் எதிர்ப்பர்

கொழும்பு,நவ.16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் திங்களன்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதனை முழு மூச்சில் எதிர்க்கும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.


''தற்சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் பலர் வெளிநாட்டில் உள்ளனரே. அவர்கள் அனைவரும் நாடு திரும்பி, திங்களன்று 'பட்ஜெட்'டை எதிர்த்து வாக்களிப்பார்களா?'' என்று அவரிடம் கேட்டோம்.

''நிச்சயமாக. ஏற்கனவே நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் திரும்பிவிட்டார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோரிடம் பேசிவிட்டோம். அவர்கள் அனைவரும் அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாவார்கள். இன்னும் ஈழவேந்தனுடன்தான் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர் கனடாவிலிருந்து அமெரிக்கா சென்றுள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல்களைத் தடுப்பதில் இலங்கையில் முன்னேற்றம் இல்லை

## ஐ.நா. பொதுச் செயலாளர் அறிக்கை



நியூயோர்க்,நவ.16

இலங்கையில் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதில் அரசாங்கம் இன்னும் முன்னேற்றத்தைக் காண்பிக்கவில்லை. அதன் செயற்பாடுகள் சிறிதளவாகவே உள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். ஐ.நாவின் பொதுச்சபைக்கு அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் -

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவில்லை.

மனித உரிமை மீறல்களை விசாரிக்கவென மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு உரிய முறையில் பூரணமாகச் செயலாற்றவில்லை. (08ஆம் பக்கம் பார்க்க)

# உங்களிடம் கப்பம் கேட்டு அச்சுறுத்தினால் உடன் படையினருக்கு அறிவியுங்கள்

யாழ்ப்பாணம்,நவ.16

கப்பம் தருமாறு எவராது அச்சுறுத்தினால், உடன் அவர்கள் தொடர்பான தகவல்களை படையினருக்கு வழங்குமாறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக தலைமையகம் நேற்றிரவு செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்.பிரதேசத்தில் தனியார் வர்த்தகர்களிடமிருந்தும் சில நபர்கள் கப்பம் பெற்று வருவதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. தற்போது பாதுகாப்பு படையினர் அந்நபர்களை கைது செய்வதற்குத் தேவையான குழுக்களை நியமித்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் மக்கள் தொலைபேசி மூலம் தந்த தகவலின் படி சில நபர்களைக் கைதுசெய்வதற்கு உதவியாக இருந்தது. அத்தோடு அப்பாவிப் பொதுமக்களிடம் கப்பம் பெறுவோருக்கு சட்டத்தின் மூலம் கடும் தண்டனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

# சந்திரிகாவின் ஆதரவாளர்கள் பலர் அரசிலிருந்து அணி மாறும் அறிகுறி

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தை ஒட்டிய பலப்பரீட்சைக்கு நேரம் நெருங்கும் பின்னணியில் அதற்காக அணி தாவும் குத்துக்கரணங்களும் சூடுபிடிக்கும் நிலையை எட்டி இருக்கின்றன.

முதலாவது பலப்பரீட்சைக்கான வாக்கெடுப்பு திங்களன்று நாடாளுமன்றில் இடம்பெற இருக்கையில் அதற்கு முன்னர் கணிசமான எண்ணிக்கையான எம்.பிக்கள் ஆளும் தரப்பிலிருந்து எதிரணிக்குப் பாய்வார்கள் என நம்பகமான செய்திகள் தெரிவித்தன. அதேசமயம், எதிர்த்தரப்பிலிருந்தும் ஓரிரு எம்.பிக்கள் ஆளும் தரப்புக்குப் பாயக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் பலரே கட்சியின் தற்போதைய தலைமைக்குத் தமது அதிருப்தியைக் காட்டும் விதத்தில் அணி மாறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு திங்களன்று இடம்பெறுகின்றது. அதில் பெரும் நெருக்கடியை அரசுத் தரப்பு எதிர்கொள்கின்றது. (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதவி வெற்றிடங்கள்




அச்சுவேலியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள செலிங்கோவின் ஆயுள் பகுதியின் பதவி வெற்றிடங்கள்

* விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்
* விற்பனை மேற்பார்வை அணித்தலைவர்கள்
* விற்பனை ஆலோசகர்கள்

## தகுதி

* ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
* வயதெல்லை 18-40
* O/L, A/L சித்தியடைந்தோர்
* விற்பனை சார்ந்த முன் அனுபவம் விரும்பத்தக்கது
* அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், ஏழாலை, புன்னாலைக் கட்டுவன், மட்டுவில் பகுதிகளில் இருப்போருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

## பணிபுரிவோருக்கு

* கவர்ச்சிகரமான வருமானம்
* வெளிநாட்டுச் சுற்றுலாக்கள்.
* கார்கள் மற்றும் வீட்டுக் கடன்கள்
* திறமைகளுக்கு ஏற்ப பதவி உயர்வுகள்.

18.11.2007 ஞாயிற்றுக்கிழமையன்று தகுதி உடையவர்கள் நேர்முகத் தேர்வுக்காக காலை 9.00 மணி தொடக்கம் ந.ப.12மணி வரை யா/அச்சுவேலி மத்தியகல்லூரி மண்டபத்துக்கு அழைக்கப்படுகின்றீர்கள்

**செலிங்கோ ஆயுள் பகுதியினர்.**
021 226 4183, 060 221 2599

(67958)


## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்ப்பாணக் கோட்ட மட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இன்று நடைபெற விருந்த தரம்7, தரம்10 ஆகியவற்றுக்கான சைவ நெறிப்பாடச் செயலமர்வு பிற்போடப் பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதிக்கு இச் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

## வியாழ மாற்றம்: சாவகச்சேரியில் மஹா யாகம்

வியாழ மாற்றத்தை மன்னிட்டு சாவகச்சேரி சந்திர சேகர வாரிவனநாத சிவன் ஆ லயத்தில் இன்று காலை 7 மணிக்கு மஹாயாகம் இடம்பெறவுள்ளது.

வியாழ மாற்றத்தால் தோஷம் அடைபவர்கள் இந்த யாகத்தில் பங்கு ற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (1-231)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
### வருடாந்தப் பொதுக் கூட்டம்

அன்புடையீர்!

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 02.12.2007 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர்கள் (அங்கத்தவர்கள்) அனைவரும் தவறாது வருகை தந்து பூரண ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்

* பிரேரணைகள் 28.11.2007இற்கு முன்னர் எமக்கு கிடைக்க வேண்டும்.
தவறாது சமுகம் தருக.

வீ.கணேசராசா (அதிபர்), தலைவர்.
பேராசிரியர் ப.சிவநாதன், செயலாளர்
(சி-54376)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஸ்ரீரங்கநாதன்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஸ்ரீரங்கநாதன் 13.11.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி கந்தையா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் ஸ்ரீரங்கநாயகியின் அன்புச் சகோதரனும் சாந்தியின் அன்புக் கணவரும் கம்சியா, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மாகியப்பிட்டி கந்தையா - மனோன்மணி தம்பதியரின் மருமகனும் திருமதி சித்திரா(நல்லூர்), ஈஸ்வரன்(இத்தாலி),ஜெகதீஸ்வரன்(இத்தாலி), அமரர் ரஞ்சன், ரஞ்சனா ஆகியோரின் மைத்துனரும் கிரியா, கஸ்தூரி, பூவா ஆகியோரின் மாமனும் கஜானு, சாரங்கா, துவாரகா ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.* (67964)

தகவல்
சாந்தினி (மனைவி).

## இளையவன் மார்க்கண்டு
(மாங்குளம் சின்னத்தம்பி)

அச்சுவேலி தெற்கு, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் மார்க்கண்டு (மாங்குளம் சின்னத்தம்பி - இளைப்பாறிய புகையிரத சேவை உத்தியோகத்தர்) 14.11.2007 அன்று காலமானார்.

அன்னார் இராசலஷ்மியின்(கிளி)அன்புக் கணவரும் பாஸ்கரன் (புகையிரதசேவை அலுவலர் - வவுனியா), சிறிகரன் (புகையிரதசேவை அலுவலர் - வவுனியா),கருணாகரன்,சசிகரன்,வசந்தமாலா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்கன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாவற்காடு, அச்சுவேலி.*

தகவல்
மா.கருணாகரன்
(மகன்).

## சற்குணராசா ஜெயபாலன்
(டனியன் - தேவ ஊழியர், A.O.G. சுன்னாகம்)



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணராசா ஜெயபாலன் 13.11.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்புமகனும் கலைவாணியின் அன்புக்கணவரும் ஜெயந்தன், ஜனனி(ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(16.11.2007)வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4.30 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.* (67962)

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பிப்பிள்ளை சிற்றம்பலம்

காடிவளை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிற்றம்பலம் நேற்று (15.11.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக்கணவரும் லங்கநாதனின்(லங்கா) தந்தையும் ஞானமலரின் அன்பு மாமனும் கவிதா, காண்டீபன்(அமரர்), ஜெகதீபன், சற்குணசோழன், கஸ்தூரி ஆகியோரின் பேரனும் கவியாழன், தமிழாழன், வித்தகி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2007)வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வள்ளிப்பிள்ளை
(மனைவி).


## JAFFNA COLLEGE

Presents A Carol Service

**'Jesus is God's gift to us'**

on

Sunday 18th November 2007

at 3.00 pm

in

The Cathedral, Vaddukoddai

*You and your friends are cordially invited*

**Principal**

(சி/54380)



## சேவை

VISA, VISA, VISA சகல நாடுகளுக்கும் சகல வகையான VISA பெறவும் மிகச் சரியான ஆலோசனை மற்றும் Passport Embassy Form நிரப்ப நியாய விலையில் Airticket பெற என அனைத்து பயண ஒழுங்குகளுக்கும் அழையுங்கள். A.Ravi kumar யாழ். முன்னாள் பிரபல தாவரவியல் ஆசிரியர்.
0773554552, 0114945463, 0114863655



## விற்பனைக்கு

பலாக்கட்டைகள், தென்னம்பிள்ளைகள், மாதுளம் கன்றுகள், கயூக் கன்றுகள், ஒரு கிலோ கொய்யாக்கன்று, அப்பிள் கொய்யக் கன்றுகள், பருத்திக் கன்றுகள், இந்தியன் முருக்கங் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

கையிருப்பு இருக்கும் வரை மட்டுமே!

தொடர்பு : நிர்வாகத்தினர், அல்லாரை விவசாய உற்பத்திப் பண்ணை, அல்லாரை, கொடிகாமம்.

விளம்பர அனுசரணை:
ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
170, 172, கண்டி வீதி,
சாவகச்சேரி. (67961)



## OOTRU ORGANISATION
### VACANCIES

Application are called for the following posts

01) **Project Officer- L.R.U.C**
A University Graduate with experience in Computer Programmes, E.mail and Internet is required for the learning Resource Utilization Center at Malisanthi, Alvai.

02) **Accounts Officer**
B.Com. degree or HNDA and Computer Literacy. Knowledge in Accounting Package(Quick Book) will be an advantage.

03) வாகன ஓட்டுநர் - பிக்கப், ஓட்டோ
வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரமும், அனுபவமும் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களைக் கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு 24.11.2007 இற்கு முன் அனுப்பவும்.

**பணிப்பாளர்,
ஊற்று நிறுவனம்,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.** (67952)

தொலைபேசி:
021-226 4505


## நெஞ்சை நெகிழவைக்கும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**

**நாக. பரமசாமி**
(ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம் 14.01.1936 மறைவு 16.11.2006

"காலாதிகாலமாய் எம்முடன் வாழ்ந்தது
போதுமென்றோ
கர்த்தர் திருப்பாதம் துணையென நம்பி
பரலோகம் சென்றீர்கள்"

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
திருமதி [illegible] (மகள்)
இல. 28, திருமகள் வீதி,
அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

**2008 ஆம் ஆண்டிற்கான
சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் ஆகியவற்றிற்கான
கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்**

*மேற்குறிப்பிட்ட வற்றிற்கான கேள்விப் படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.*

*கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 22.11.2007 பி.ப 2 மணிவரை*

*கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :- 23.11.2007 ந.ப12 மணிவரை*

*கேள்வி திறக்கும் திகதி :- 23.11.2007 பி.ப. 2 மணிக்கு*

*குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

வலி தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
14.11.2007 (சி-54375)

திருமதி ச.சொக்கலிங்கம்
செயலாளர்,
வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.16

2007ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் 10 இடங்களுக்குள் வந்த மாணவர்கள் மற்றும் 180 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் ஆகியோருக்கு இலங்கை வங்கி புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

இந்த மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்ற தினம் முதல் வங்கியின் சிறுவர் சேமிப்புக் கணக்கில் 2ஆயிரத்து 500 ரூபா வைத்திருத்தல் வேண்டும்.

தகுதியானவர்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (203)

## பிரதேச ஊடகவியலாளருக்கு விருது வழங்கும் நிகழ்வு

கொழும்பு,நவ.16

பிரதேச ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஆலோசனையுடன் இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய ஐந்து ஊடக அமைப்புகள் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வில் மாகாண வெற்றியாளர்கள், தேசியமட்ட வெற்றியாளர்கள் ஆகியோருக்கு விருது, பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (203)

## புங்குடுதீவு-இறுப்பிட்டி வீதி பல வருடமாக சேதம் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடி

### விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.16

புங்குடுதீவு - இறுப்பிட்டி வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளமையால் இப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

புங்குடுதீவு பெருங்காடு சந்தியில் இருந்து இறுப்பிட்டி துறைமுகம் வரையான சுமார் 3 மைல் வீதி தற்சமயம் பலத்த குன்றும், குழியுமாக 20 வருடங்களுக்கு முன் போடப்பட்ட கற்கள் சிதறிக் கிடக்கும் நிலையில் மழைநீரும் தேங்கி வாகனப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளது.

இதனால் பொதுமக்களும் நடந்து செல்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

யாழ்.நகரில் இருந்து இறுப்பிட்டி பகுதிக்கு கடமைக்காக வரும் ஆசிரியர்கள் உட்பட்ட அரச ஊழியர்கள் பெருங்காடு சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கி 3 மைல்கள் தூரம் நடந்து தமது பாடசாலைக்கும் அலுவலகங்களுக்கும் சென்றுவரவேண்டியுள்ளது.

யாழ்.நகரில் இருந்து இந்த வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ் அது போக்குவரத்துக்கு உகந்ததல்லஎன்று காரணம் காட்டி கடந்த பல மாதங்களுக்கு மேலாக சேவையை நிறுத்திக்கொண்டது.

புங்குடுதீவில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கென வரும் நோயாளர்கள் போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையில் தனியார் வாகனங்களில் அதிக பணம் கொடுத்து பெருங்காட்டுச் சந்திக்கு வந்தே பஸ்ஸில் வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(203-111)

## பரதநாட்டிய செய்முறை விளக்க இறுவட்டு மற்றும் தாளவிளக்க நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.16

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்தும் பரதநாட்டியம் செய்முறை விளக்க இறுவட்டு, செய்முறை தாளவிளக்க நூல் ஆகியற்றின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடன சிரேஷ்ட விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசனும் சிறப்பு விருந்தினராக இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சுகந்தினி முரளீதரனும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசன் நிகழ்த்த நூலின் முதற்பிரதியை ஓய்வுபெற்ற உப அதிபர் எஸ்.கே. இந்திரராசா விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடா கிளை சார்பாகப் பெற்றுக்கொள்வார்.

மதிப்பீட்டுரையை இராமநாதன் நுண்கலைப்பீட மிருதங்க சிரேஷ்ட விரிவுரையாளர் சி.மகேந்திரன் நிகழ்த்துவார்.

ஏற்புரையை நடன ஆசிரியை திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் நிகழ்த்துவார்.

(203-28)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.16

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சேக்கிழார் விழாவை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் சேக்கிழார் விழாவும் சைவ மாநாடும் நடத்தவுள்ளது.

திணைக்களத்தின் மாவட்ட இணைப்பாளர் கே.தேவேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (203-79)

* * *

நல்லூர்,நவ.16

கொக்குவில் கிழக்கில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து சேவாலங்கா நிறுவனம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொக்குவில் பொதுநூலக மண்டபத்தில் சமூகவலுவூட்டல் நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-111)

* * *

வலி.தென்மேற்கு,நவ.16

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ்.சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (203-135)

* * *

யாழ்ப்பாணம்,நவ.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 11 வகுப்புகளில் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பு பற்றி செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

* * *

வடமராட்சி,நவ.16

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குக் குடத்தனை நற்றூதுப் பணியகத்தில் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி முறைசாராக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.தவேந்திரராஜா தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (203-160)

* * *

யாழ்ப்பாணம்,நவ.16

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. அத்துடன் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற கண்பரிசோதனை முகாமில் பங்குபற்றியவர்களுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,நவ.16

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு ஒன்று யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தின் ஆதரவுடன் மானிப்பாய் யூ.என்.ஐ. கணனி நிறுவன அனுசரணையுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடத்தப்படவுள்ளது. (203)

## கோட்டைப் பகுதியிலுள்ள மக்கள் அடிப்படை வசதிகளின்றிச் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கோட்டைப் பகுதியில் மீனாட்சி அம்மன் ஆலய சுற்றாடலில் வசித்துவரும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகத் யாழ்.தமிழர் விடுதலைக்கூட்டணி, யாழ்.மாநகர சபை ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் இன்றிச் சுகாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் மலசலகூடம் எதுவும் அமைக்கப்படவில்லை, நீர்விநியோக கம்பம் ஒன்று மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தெருவிளக்குகள் எதுவும் இப்பகுதியில் இல்லை. வீதிகள் எவையும் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இப்பகுதியில் முன்னர் பொதுமலசலகூடம் அமைக்கப்பட்டிருந்தது. அதுபின்னர் இல்லாமல் செய்யப்பட்டு சில குடியிருப்பாளர்களுக்கு மட்டும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அவையும் தற்போது அழிவடைந்துவிட்டன.

இதனால் பொது இடங்களில் மலசலம் கழிக்கப்படுவதால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது.

எனவே இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மக்களின் குறைபாடுகள் நீங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

(203)



ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் -

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஏ.சி.அலெக்ஸ்ராஜா தேசிய கலை இலக்கிய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் லக்ஸ்மன்)

## சம்பந்தன் விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம்,நவ.16

இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக சம்பந்தன் விருது வழங்கும் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

2006ஆம் ஆண்டின் மிகச்சிறந்த ஆய்வு நூலாகத் தெரிவுசெய்யப்பட்ட 'மலாய்க் குடிப்பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்' என்ற நூலினை ஆக்கிய பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலனுக்கு விருது வழங்கப்படவுள்ளது.

நிகழ்வில் நினைவுப் பேருரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

நூல்நயப்புரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் பதிலுரையை பேராசிரியர் ச.சத்தியசீலனும் நிகழ்த்துவர். (203)

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் சமூக சேவைகள் அமைச்சின் பன்முகப்படுத்திய வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் இரண்டு லட்சத்தி 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கலாசாலை வீதி, மகாத்மா சனசமூக நிலைய புனரமைப்புப் பணிகளுக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் வீரமாகாளியம்மன் கோயில் பொதுக்கிணறு திருத்தம் மற்றும் நீர்தாங்கி அமைத்தலுக்கும் ஒரு லட்சம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது. (203-68)

## வெளிமாவட்ட ஆசிரியர்கள் 12 பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள ஏனைய மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களில் பன்னிரண்டு பேருக்கு யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் கோரி மேன்முறையீடு செய்தவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை தற்காலிக இடமாற்றம் மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## உரம் விநியோகம்

சங்கானை,நவ.16

தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் மானிய உரத்துக்கு விண்ணப்பித்து இதுவரை பெறாதவர்களுக்கு இரண்டாம் கட்ட விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் உரியவர்கள் உரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தொல்புரம் கமநலசேவை நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(203-29)

## அறநெறிப் பாடசாலைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள்

யாழ்ப்பாணம், நவ.16

அகில இலங்கை இந்து மாமன்றம் வழங்கியுள்ள அப்பியாசக் கொப்பிகள் குடாநாட்டில் இயங்கும் சகல அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ளன

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதி, 211/17 இலக்கத்தில் அமைந்துள்ள மாமன்றத்தின் யாழ்.அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

மாணவர் எண்ணிக்கையை சமயப் பெரியார் அல்லது கிராமசேவையாளர் அல்லது பாடசாலை அதிபர் ஆகியோரின் சிபார்சுடன் சமர்ப்பித்து அப்பியாசக் கொப்பிகளை பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## பரு.வைத்தியசாலையில் மாதிரி வரைபடம்

வடமராட்சி, நவ.16

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் வைத்தியசாலைக்குள் செல்லவேண்டிய பிரிவுகளை விரைவாக சிரமமின்றித் தெரிந்துகொள்வதற்கு வசதியாக, மாதிரி வரைபடம் ஒன்று வைத்தியசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் நுழைவாயிலில் வெளிநோயாளர் பிரிவில் உள்ள சுவரில் இம்மாதிரி வரைபடம் வரையப்பட்டுள்ளது. (203-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 ★ 02 ★ 1938



உதிர்வு 17 ★ 10 ★ 2007

### அமரர் சுப்பு வைத்திலிங்கம்

*(உரிமையாளர் - லிங்கம் அந்தியகால சேவை)*

இன்று (16.11.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*207, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/54351) குடும்பத்தினர், சகோதரர்கள்.

## ஒத்துமாறல்

மாத்தளை மாவட்டப் பாடசாலையில் நடன ஆசிரியையாக கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். *வ.முருகேசு, முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.*

(67938) தொடர்பு: 077 6251215

## ஆட்டிறைச்சிக் கடை திறப்பு

புத்தூர் சந்தையில் இயங்கிய ஆட்டிறைச்சிக் கடை தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. மீண்டும் நாளை (17.11.2007) தொடக்கம் அதே இடத்தில் திறக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

(67948) M.S.M. தருமத்துல்லா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



"இந்து தர்மத்தில் பத்துக்கள்"
என்னும் ஒலி - ஒளி இறுவட்டின் மூலம்
இந்து சமயத்துக்கும் தமிழுக்கும்
அருந்தொண்டாற்றிய
*கலாபூஷணம்*

**சு.துரைசிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் பணி மேலும் சிறக்க எல்லாம் வல்ல கந்தரோடை வீரகத்தி விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

போகாஸ் தொலைத்தொடர்பகம்,
*கந்தரோடை, சுன்னாகம்.*

(சி/54363)

## மாதாந்தக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, நவ.16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவி பணக் கொடுப்பனவை பெறுபவர்களுக்கான நவம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இப்பிரிவில் இந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்றுவரும் காச நோயாளர்கள், தொழு நோயாளர்கள் மற்றும் புற்றுநோயாளர்களும் தமக்குரிய தபாலகங்களில் இக்கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. இராசையா இராசசேகரம்

(B.A., Dip. in Edu., Sc. Trd. S.L.P.S- 2 I)

**அன்புள்ளங் கொண்டவர்**
**ஆற்றல்கள் மிக்கவர்**
**அனுபவத்தில் சிறந்தவர்**
**பதவி உயர்வது தேடி வந்ததால்**
**உயர்வதனை பெற்றுச் செல்லும் - எங்கள் அதிபரை**
**பாராட்டுவதில் பெருமகிழ்வுறுகின்றோம்.**

*எமது பாடசாலையில் கடந்த 5 வருடங்களாக அதிபராகச் சேவையாற்றி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அதிபராக 01.11.2007 அன்று முதல் பதவி உயர்வு பெற்றுச்சென்ற எங்கள் அதிபரின் கல்விப்பணி மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் குழுகம்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி. (சி/54359)


## Brown & Co. Ltd.



வழங்கும்

**SHARP Photo Copiers**
**(Digital)**

இப்பொழுது விஷேட விலைக்கழிவில்

- ஒரு வருடம் அல்லது 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்
- ஒரு வருடத்திற்கான இலவச பழுது பார்த்தல் வசதிகள்
- விற்பனைக்கு பிந்திய தரமான சேவை

இறுதிக் கையிருப்பு உள்ளவரை மட்டுமே

தொடர்புகளுக்கு: 021 222 4040
Hotline: 0777 585909
077 6623824

(67945)


## தேசத்தின் சமாதானத்திற்கான பொதுவான ஐக்கிய உபவாச ஜெபம்

| | |
|---|---|
| செய்தியாளர்: | Rev.J.ஜெயசீலன் (எபநேசர் ஜெப ஆலயம்) |
| இடம்: | தேவசபை (A.O.G) No:14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். |
| காலம்: | நாளை (17.11.2007) சனிக்கிழமை |
| நேரம்: | ஆரம்பம் காலை 9.30 மணிமுதல் |

*என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி... (11 நாளாகமம் 7:14)*

ஜெபிக்க விரும்பும் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**யாழ்.சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்,**
போதகர் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

(67931)

## 21ஆவது பிறந்தநாள் நினைவலைகளும் 116ஆவது நாள் நினைவஞ்சலியும்

செல்வி

### அரியராசா கார்த்திகா

(கார்த்தி)

(பழைய மாணவி, யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, 2006 கலைப்பிரிவு)



அன்னை மடியில்
16.11.1986

அன்னை அடியில்
24.07.2007

மாறிலா மனம் கொண்டவளே - கார்த்தி
நீறாகிப் போனதுவோ உன் அழகுடலம்
மற்றவர் மனம் கவர்ந்தவளே - கார்த்தி
வாழாதொழிந்தாயே ஏனம்மா?
வாழ்வதற்கு மனமில்லையா கார்த்திகை மலரே
பாழாகிப் போனதோ எங்கள் பாசமலர்
சோலைக்குயிலே தேனான மொழி பேசி
தெவிட்டாத கதை சொல்லி சிரிக்க வைப்பாயே
விழிவழி சொரியும் நீரையெமக்கு
வாழ்நாள் முழுவதும் உரித்தாய் படைத்தாயே
ஏக மகளாய் சீருடன் வாழ்ந்தவளே
அகவை இருபத்தொன்றை கொண்டாடி மகிழ
இன்று நீ எம்முடன் இல்லையே...

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

*உன் பிரிவால் ஏங்கும்:*
சந்திரலீலா (அம்மா) ...
...ஜென் (அண்ணா) ... (அண்ணி)

(67937)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 • 08 • 1929



மறைவு 28 • 10 • 2006

இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி கந்தையா மகேஸ்வரி

திதி:- சஷ்டி

*தாய்முகம் பூமுகம் புன்சிரிப்பு தோற்றமம்மா*
*நீயிருந்து ஒளியேற்றி வைத்தலில்ல மிருள் சூழ்ந்ததம்மா*
*நீயளித்த அரவணைப்பும் அறுசுவையும் இழந்தோமம்மா*
*ஆண்டொன்று பல நூறானாலும் மறவோம் அம்மாவை.*

*அன்பு அம்மாவின் ஆத்மா கற்பக விநாயகப் பெருமானின் திருவடி நிழலில் சாந்தி பெறப் பிரார்த்திப்போமாக.*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

விதானையார் வீதி,
இருபாலை. (67882) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துண்டுப்பிரசுர விநியோகம்; மறுக்கின்றனர் புலிகள்

கொழும்பு,நவ.16

மன்னார் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி துண்டுப்பிரசுரங்கள் எதனையும் விடுதலைப்புலிகள் வெளியிடவில்லை என்று வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை அண்மித்த 5 கிலோமீற்றர் சுற்றளவில் வசிக்கும் அனைவரையும் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறும்படி விடுதலைப்புலிகளின் தற்கொலைப் பிரிவு துண்டுப்பிரசுரங்கள் மூலம் கோரியுள்ளது எனத் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

ஆனால் குறிப்பிட்ட துண்டுப்பிரசுரங்கள் விடுதலைப் புலிகளால் வெளியிடப்படவில்லை என்றும் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற மாவீரர் தின வைபவங்களை குழப்புவதற்காக அரச படைகள் மேற்கொண்ட நடவடிக்கையே இவை என்றும் விடுதலைப் புலிகள்தெரிவித்திருக்கின்றனர். (சி)

# எத்தகைய படை நடவடிக்கைகளையும் தமிழர் தாயகம் எதிர்கொள்ளத் தயங்காது

## வரவு-செலவுத் திட்டத்தை விமர்சித்து சிவநேசன் எம்.பி. உரை

கொழும்பு,நவ.16

தமிழர் தாயகத்தின் மீது பாரிய படை நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான வரவு-செலவாகவே 2008 ஆம் ஆண்டிற்கான அரசின் வரவுசெலவுத் திட்டம் அமைந்திருக்கிறது. அப்படி ஒரு படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள தமிழர் தேசம் தயாராகவுள்ளது.



-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கி.சிவநேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஒரு தமிழ்ச் செல்வனை கொலை செய்ததன் மூலம் தமிழினத்தின் போராட்டத்தை நசுக்கிவிட்டதாக யாரும் கருதக்கூடாது. அவ்வாறு கருதினால் அது பகல் கனவு என்பதை உணரவேண்டும்.

இந்த நிலைமையினை அரசு புரிந்து கொள்ளத் தவறினாலும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளத் தவறக்கூடாது. எதிர்காலத்தில் அரசு சில நாடுகளின் நிதி உதவி, இராணுவ தளபாட, இராணுவ உதவி, ஆலோசனைகள் என்பவற்றுடன் தமிழர் தாயகத்தின் மீது பாரிய படை நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளது. படை நடவடிக்கைக்கான வரவு-செலவுத் திட்டமாகவே 2008ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தயாரித்திருக்கின்றது.

தமிழர் தாயகப் பகுதி மீது படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால்- அதனை எதிர்கொள்வதற்கு தமிழர் தேசம் தயாராகிவிட்டது. போரின்போது பாரிய அழிவுகள் ஏற்படலாம். இந்த அழிவுகள் ஏற்படாமல் தடுத்துப் பாதுகாப்பதற்கு சர்வதேச சமூகம் முன்வரவேண்டும். அது சர்வதேசத்தினால் முடியாமல் போனால் தமிழர் தேசம் போராட்டத்தின் வெற்றியூடாக அரசிடம் இருந்து பிரிந்துசெல்லும் நிலை வரும்.

இந்தப் போரில் பாதிப்பை எதிர்கொள்பவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களுமே என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழர் தேசத்தில் மனிதப் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், சித்திரவதைகள், இடம்பெயர்வுகள் போன்ற மனிதப் பேரவலங்களை ஏற்படுத்தியமையை எம்மால் அவதானிக்க முடிகிறது.

கடந்த 2 ஆண்டுகளில் 2031 தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 961 பேர் காணாமல் போயுள்ளனர். மூன்று லட்சத்து நாற்பதாயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

தமிழர் நிலங்களை அபகரித்து அங்குள்ள வளங்களை அழித்து வாழ்வாதாரமற்ற பிரதேசமாக தமிழர் தாயகத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளை மேலும் தமிழர் தேசத்தில் முன்னெடுப்பதற்கான வரவு-செலவுத் திட்டமே இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அவர்களின் வாழ்வில் தொடர்ந்தும் மனித அவலத்தை ஏற்படுத்தும் நோக்கமாகவே எந்த அபிவிருத்திக்கும் ஒதுக்காத அளவுக்கு 16 ஆயிரத்து 644 கோடி ரூபா யுத்த செலவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (சி)

# யாலப்பகுதித் தாக்குதல்களின் பின்னணியில் புலிகளாம்

## இராணுவத் தரப்பினர் சந்தேகம்

கொழும்பு,நவ.16

யால வனவிலங்குகள் சரணாலயத்தை அண்டிய அம்பாந் தோட்டை எல்லைப் பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்றுள்ள தாக்குதல் மற்றும் கொலைகள் தொடர்பான சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்று இராணுவத்தரப்பினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதுவரை எவரும் கண்டுபிடிக்கப்படவோ கைதுசெய்யப்படவோ இல்லை.ஆனால் விரைவில் சந்தேகநபர்கள் பிடிபடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.-என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரா பி.பி.சி.சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா யாலப்பகுதிக்கு விஜயம்மேற்கொண்டுநிலைமைகளை ஆராய்ந்துள்ளார். தேடுதல்நடவடிக்கை களைத் துரிதப்படுத்தும் படியும், நிலைமைகள் சுமுகமாகும் வரைஅப்பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்துமாறும் அவர் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இதேவேளை ரன்மினிதென்ன கிராமத்தில் 11 பொலிஸ்காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# யுனிசெவ் அமைப்புக்கு எதிரான குற்றச்சாட்டு பணியாளர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## அந்த அமைப்பு அறிக்கை

கொழும்பு,நவ.16

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் அமைப்புக்கு எதிராக ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ எம்.பி. நாடாளுமன்றில் வெளியிட்ட தகவல்களுக்கு பதிலளித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றது அந்த அமைப்பு.

நேற்று முன்தினம் புதன்கிழமை அந்த அமைப்பு உத்தியோகபூர்வமாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

சமீபத்தில் யுனிசெவ் ஸ்தாபனத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும் எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் எமது பணிபுரியும் ஆற்றலை பாரதூரமாகப் பாதிப்பதுடன் அவை எமது பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

நிதி, பணியாளர் குழாம் உள்ளிட்ட எமது பணிகள் சார்ந்த சகல துறைகளிலும் இலங்கை மக்களுக்கும், அரசுக்கும் வெளிப்படையாகவும் நம்பகமாகவும் நடந்துகொள்வது எந்தளவுக்கு முக்கியமானது என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம்.


ஐ.நா. பணியாளர்கள் சகலரும் ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கும், ஐக்கிய நாடுகள் கோட்பாடுகளுக்கும் பொறுப்புடையவர்களாக இருக்கவேண்டிய விதிமுறைகளுக்கு அமைவாகவே நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் முழு அளவில் நடுநிலையாக பணியாற்றவேண்டியதும், மூன்றாம் தரப்பிலிருந்து எதுவித பணிப்புரைகளையும் பெறாமல் இருப்பதற்குரியதுமான கௌரவ கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

எமது சகல பணிகளின்போதும் அரசுடன் கைச்சாத்திட்ட ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்திலும், கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கட்டியெழுப்பிய பங்காளித்துவத்திலும் நாம் சார்ந்திருக்கின்றோம். யுனிசெவ் ஸ்தாபனம் கடந்த ஐந்தாண்டுகளில் இலங்கையின் சகல பாகங்களிலும் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள், போஷாக்குப் போன்ற பல துறைகளிலும் பிள்ளைகளின் மிகவும் அவசரமான தேவைகளை நிறைவேற்றுவதற்காக சுமார் 18 கோடி டொலர்களை செலவிட்டுள்ளது.

யுனிசெவ் ஸ்தாபனம் மாத்திரமன்றி அதன் பணியாளர்களும் தொடர்ந்தும் அரசினதும், இலங்கையின் பெரும்பாலான மக்களினதும் நம்பிக்கையை வென்றுள்ளார்கள் என்று நாம் திடமாக நம்புகிறோம்- என அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. (சி)

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

## (15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.




மூலம் 1-4, பூராடம் 1-4, உத்தராடம் 1ஆம் பாதம் 12 இல்இருந்து வந்த ராசிநாதன் குருபகவான் ராசியில் வருகிறார். பல இன்னல்களுக்குப் பின் நன்மைகள் வரக் காத்திருக்கின்றன. தேக ஆரோக்கியம் நன்றாகும். பட்ட காயங்கள் மறையும். 9 இல் இருக்கும் சனி குருபார்வையால் தகப்பனார் வழி செலவுகள் குறைப்பார். அவர்களால் நன்மையுண்டு. கணவன், மனைவி உறவு சுமூகமாக இருக்கும். திருமணங்கள் கைகூடும். பிரிவில் இருந்த கணவன், மனைவி சேர வாய்ப்புக் கிடைக்கும். மக்களால் நன்மையுண்டு. அவர்கள் படிப்பில் முன்னேற்றம், பரிசுகள், புலமைப் பரிசில், கடன் வசதி கிடைக்கும். நண்பர்கள், சகோதரர்கள் உதவுவார்கள். வீடு மாற்றம், வாகனயோகம் சிலருக்குக் கிடைக்கும். சிலருக்கு புதுவீடுகள் வாங்கயோகமுண்டு. புனித யாத்திரைகள், தெய்வழிபாடுகள், பிரார்த்தனைகள் நிறைவேறும். பூர்வீக சொத்துகளில் இருந்த வில்லங்கங்கள் தீரும். கிணறுகள், ஆழ்கிணறுகள் தோண்ட சிலருக்கு யோகமுண்டு. லாபம் அதிகமாகும். அரச காரியங்கள் நிறைவுதரும். வெளியூர் செல்ல சிலருக்க வாய்ப்பு கிடைக்கும் களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் நீண்டநாள் இருப்பதால் சில பிரச்சினைகள் பெரியவைகளாக மாறாமல் இருப்பது தட்செணா மூர்த்திக்கு மல்லிகைமாலை சார்த்துதல், தேன் அபிஷேகங்கள் செய்வது பலன்தரும். பெரியோர்களுக்கும், முடவர்களுக்கும் தானம், உதவிகள் செய்யவும். அதிர்ஷ்ட திகதிகள் 3,6,9,12,15,18,21,26

**பெண்களுக்கு:-** இந்த குருப்பெயர்ச்சியால் குருபகவான் உங்கள் ஜென்மராசிக்கு வந்திருப்பதால் சிறப்பாகஇருக்காது. கடந்த வருடங்களில் 12 ஆம் இட குருவாக இருந்து நிறைய நட்டங்களை ஏற்படுத்தினார் இந்தக் குருப் பெயர்ச்சியால் ஜென்ம குருவாக வந்து இருப்பது அவ்வளவு சிறப்பு இல்லை. உடல் நலத்தில் தொந்தரவுகள் வரலாம். அடிக்கடி மருந்துச் செலவுகள் வரலாம். இந்தக் காலத்தில் தொந்தரவுகளும், பிரச்சினைகளும் உங்களைத்தேடி வரலாம். மனக்கவலை உங்களை எப்போதும் வாட்டிக் கொண்டே இருக்கும். சில பெண்களுக்கு வயிறு சம்பந்தமான கோளாறுகள் வரலாம். கவனமாக இருப் பது நன்று. சில பெண்களுக்கு வேலைக்குப் போவதற்கான சந்தர்ப்பங்கள் வரலாம். பிள்ளைகளாலும் மனக்கஷ்டம் வரலாம். கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள் வர லாம். பெறுமையோடு இருப்பது நல்லது. குருபகவானை வியாழக்கிழமை தோறும் நெய்தீபமிட்டு வழிபடுவது நன்று. விநாயகப் பெருமானை வழிபடுவதும் மிகச்சிறப் பாகும் 10.05.2008 முதல் 07.09.2008 வரை குரு வக்ரம் அடைவதால் ஒரு சில மாற்றங்களும், பிரைச்சினைகளும் மாறிக்கிடைக்கும். இந்த நேரத்தில் மகிழ்ச்சியான தகவல் கள் வீடு தேடி வரும். இந்தக் குருப்பெயர்ச்சி யால் பரிகாரங்கள் செய்வதன் மூலம் நிவர்த்தி கிடைக்கும்.

**மாணவர்களுக்கு:-** இந்த ஜென்ம குரு படிப்பில் தடைகள் ஏற்படுத்தலாம். படிப்பில் ஒரு பிடிப்பில்லாமல் இருக்கும். படிப்பில் கவனம் செலுத்தாமல் ஏதாவது சிந்தித்துக் கொண்டு இருப்பீர்கள். இதனால் படிப்பில் பாதிப்பு ஏற்படலாம். மனம் சிதறாமல் இருக்க விநாயகப் பெருமானுக்கு தேங்காய் உடைத்த பின்பு தட்செணா மூர்த்தியை வழிபடுவது நன்று. எனவே கவனமாகவும், நிதானமாகவும் தெய்வ சிந்தையோடு படித்தால் வெற்றி கிடைக்கும்.


**அரசாங்க வேலை செய்வோருக்கு:-** இந்த குருப்பெயர்ச்சியால் எதிலும் பிடிப்பு இல்லாமல் இருப்பீர்கள். வேலைக்குப் போவதும் உங்களுக்கு விருப்பமில்லாமல் இருக்கும். சோம்பேறியாக இருப்பீர்கள். மந்தமான சூழ்நிலைகள் நிறையவே காணப்படும். வருமானம் பாதிப்படைவதற்கான வாய்ப்பு வரலாம். முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லது. மேலதிகாரிகளின் அதிகாரம் மேலோங்கி இருக்கும். தேவையற்ற பிரச்சினைகளும், தொல்லைகளும், வீண் வம்புகளும் வந்து சேரும். வியாழக்கிழமை குருவை வழிபடுவது நன்று. கிட்டவந்த வாய்ப்புக்கள் எல்லாம் தட்டிப்போகும். நண்பர்களிடமும், உறவினர்களிடமும் மனவருத்தங்கள் வரலாம். எனவே பொறுமையோடும், நிதானத்துடனும் இருப்பது நன்று.

**சொந்தத் தொழில் செய்வோருக்கு:-** இந்தக் குருப்பெயர்ச்சி எதிர்பார்ப்புக்களைவிட எதிர்ப்புகளே அதிகம் காணப்படும். ஜென்ம குருவில் தொழில் விரயங்கள் ஏற்படலாம். வரவேண்டிய பணம் எல்லாம் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கும். இந்தப் பெயர்ச்சியில் முயற்சிகளில் எல்லாம் தடைகளே காணப்படும். இப்போது தொழில் போட்டியும், பொறாமையும்தான் கூடுதலாக இருக்கும். வேலையால்களால் கூட பிரச்சினைகள் வரலாம். ஒரு சிலருக்கு கெட்ட பெயர், அவமானம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படு கின்றன. 10.05.2008 முதல் 07.09.2008 வரை மாறுதல்கள் வரலாம். இந்தச் சமயங்களில் தொழில் சிறப்படையும். உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பல நல்ல மாறுதல்கள் ஏற்படலாம். விநாயகப் பெருமானையும், மகாவிஷ்ணுவையும் வழிபட்டு வந்தால் நன்மை கிடைக்கும். ✱

# நீங்கள் மன நிறைவு காண்பதற்கு...

உலகில் நாம் எதைப் பெற்றிருந்தாலும் ஓரளவேனும் மன நிறைவைப் பெறவில்லையெனில் நாம் பெற்றதெல்லாம் வீண் என்பது யாவரும் அறிந்தது. சற்று யோசித்துப் பார்த்தால், எமது திட்டங்களும் செயல்களும் சாதனைகளும் முடிவில் மனத்திலே ஒரு நிறைவுணர்ச்சியை ஏற்படுத்தச் செய்யப்படும் முயற்சிகளே என்பது தெரியவரும். எனவே, மன நிறைவு என்னும் இம் மாபெரும் பேற்றை நாம் அடையக் கூடிய வழி வகைகளைப் பற்றிச் சிறிது சிந்திப்பது பயனுடையது.

பூரணப்பொருளான இறைவனை அடையும்போதுதான், அடைய வேண்டிதெல்லாம் அடைந்து விட்டோம் என்ற பூரண நிறைவுணர்ச்சி ஏற்படும் என்பர். ஆனால் அந்த உன்னத நிலை எம் மனோவாக்குக்கு எட்டாதது. மேலும், அந்த நிலையை அடைந்தவர்களே அதனைப் பற்றிக் கூறத் தகுதியுடையவராவர். எனவே வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாமானிய மனிதர்களாகிய நாம் எச் சந்தர்ப்பங்களில் ஓரளவேனும் மனநிறைவைப் பெறுகிறோம் என்று ஆராய்வோம்.




மனிதர்கள் என்ற முறையில் எமக்கு எண் ணற்ற தேவைகள் உள்ளன. இவற்றுள் அடிப் படையானவை எமது உடல் சம்பந்தமான தேவைகள், பசிக்கு உணவு, உழைப்புக்குப்பின் ஓய்வு முதலியவை இப்பிரிவைச் சேர்ந்தவை. இத் தேவைகள் நிறைவேற்றப்படும்போது ஒருவகை உளநிறைவு ஏற்படுகிறது. பசித்தபோது வயிறார உண்டபின் ஏற்படும் மனநிறைவு இத்தகையது.

உயர்ந்த சமயக்கொள்கை அல்லது தத்துவக் கொள்கைகளை வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டிருப்பவர்கள் எந்தவகையான பலன் உணர்வுகளாலும் பாதிக்கப்படுவதில்லை.

''நாம் செய்ய வேண்டியவற்றை இறைவழிபாடாகச் செய்து, போற்றலையும், தூற்றலையும், வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்று, செயற்பலன்களையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்துவிட்டால், இறைவன் எமது நலன்களைப் கவனித்து எமக்கு நல்வாழ்வளிப்பான்'' என்பது கீதையின் தத்துவம். ''வாழ்க்கையில் நாம் பெறும் ஒவ்வோர் அனுபவமும் யாம் எமது தளைகளைக் களைந்து, சிவானந்தப் பெருவாழ்வு பெறத் திருவருட் சக்தியால் அளிக்கப்படும் வரப்பிரசாதமாகும்'' என்பது சைவசித்தாந்தக் கொள்கை. இத்தகைய ஓர் உன்னத கொள்கையின் அடிப்படையில் வாழ்க்கையை [illegible] பழகிவிட்டால் எதனாலும் பாதிக்கப்படாத மனநிறைவைச் [illegible] பெறுவது சாத்தியமாகும். ✱

(நன்றி:- ஆத்மஜோதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி
### 2008ஆம் ஆண்டுக்கான
### சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான
## கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடிப்பு

01.11.2007ஆம் திகதிய உதயன், 31.10.2007ஆம் திகதிய தினக்குரல் பத்திரிகைகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க் குறிப்பிட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :-
22.11.2007 வியாழக்கிழமை பி.ப.2.30 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி :-
23.11.2007 வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி :-
23.11.2007 வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி

குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி.
15.11.2007 (சி/54322)

பொன்னையா வைரமுத்து
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## பின்னுறுதித் தீர்வை
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

சிவசரணம் அருட்செல்வன்
83, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். வழக்காளி

வழ.இல: D/790 எதிர்

அருட்செல்வன் பெண் சபாரத்தினம்
மகள் திலகேஸ்வரி
நாகர்கோவில் வடக்கு,
நாகர்கோவில் . எதிராளி

இந்த வழக்கு 2007 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 06ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராகி இருக்கவும், எதிராளிக்கு அழைப்புக் கட்டளை உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டும் எதிராளி மன்றுக்கு சமுகமளிக்காமையால் வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டு, வழக்காளியின் பிராது, வ1ஆவணம், வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளிக்கும், எதிராளிக்கும் இடையில் 01.07.2004 இல் சென்னையில் பதிவு செய்யப்பட்ட பதிவு திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை விட்டுப் பிரிந்து வன்ம உறவறுப்புச் செய்த குற்றத்திற்காக இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாகும் எனக் கட்டளை இட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

இத்தீர்வைக்கமைய எதிராளி தனது கன்னிப்பெயரான சபாரட்ணம் பெண் திலகேஸ்வரி என்ற பெயரைப் பாவித்து வரவும், திருமணம் ஆகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் பாவிக்கலாம் என்றும் இதனால் கட்டளை இடப்பட்டு பின்னுறுதித் தீர்வை வழங்கப்படுகிறது.

இந்த பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதிற்சேவகம் செய்யப்பட்டு மூன்று மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை அணைக்கத் தவறினால் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வை ஆக்கப்படும்.

ஒப்பம் ஆர்.ரி.விக்னராஜா
மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்.

2007.09.06

நீதிமன்றின் கட்டளைப்படி
து.ஸ்ரீமோகன், பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்

வரைபு:
வழக்காளியின் சட்டத்தரணி

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
15 ★ 02 ★ 1953

உதிர்வு
03 ★ 10 ★ 2007

### அமரர் சபாரத்தினம் சிவாஜிகணேசன்

*சிரித்த உங்கள் முகமும் சிட்டெறும்புச் சுறுசுறுப்பும்*
*பார்த்தவர் மனம் பொறுக்கா பாதகம் செய்தனரோ?*
*ஆறாப் பசியோடு அயலவர்கள் இருந்திட்டால்*
*பொறுக்காதே உம் மனம் - இதைப் பார்த்த*
*வெறி கொண்ட அரக்கனவன் துப்பாக்கி ரவை*
*உம் உடலைத் துளைத்ததுவோ! மறப்போமா உம்*
*நினைவை கதறுகின்றோம் எந்நாளும் நாம்.*

(67739)

கடந்த (03.10.2007) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சபாரத்தினம் சிவாஜிகணேசன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.11.2007) (ஐப்பசித் திங்கள் 30ஆம் நாள்) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் பண்டாரி அம்மன் கோயில் அருகில் இடம்பெறும். நாளை (17.11.2007) கார்த்திகை முதலாம் நாள் சனிக்கிழமை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் பங்குகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*கதிரவேற்பிள்ளை வீதி,*
*தம்பசிட்டி, பருத்தித்துறை.*

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்
### முருகுப்பிள்ளை செல்லம்மா



புலோலி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகுப்பிள்ளை செல்லம்மா 12.11.2007 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தியாகராசா, சிதம்பரப்பிள்ளை, பொன்னையா, தங்கம்மா ஆகியோரின் சகோதரியும் முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் பிரபாகரனின் (ஜேர்மனி) அன்புத் தாயும் விக்னேஸ்வரியின் (ஜேர்மனி) அன்புமாமியும் நிசாந், ஜெந்துஜன், சாலினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 13.11.2007 செவ்வாய்க்கிழமை சுப்பர் மடம் இந்துமயானத்தில் இடம்பெற்றன என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க.செல்வக்குமார்.

திருநாவலூர்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (சி/54373)

## சாவகச்சேரியில் 100 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம்,நவ.16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த 11ஆம் திகதி மட்டுவில் வடக்கில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ பரிசோதனையில் கண் பார்வையில் குறைபாடு காணப்பட்ட 100 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கழகத்தின் ஆரம்பகால உறுப்பினர் லயன் பே.பிலிப்ஸ் ஞாபகார்த்தமாக மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலையில் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

பரிசோதனை முகாமில் கண் பரிசோதனையில் கலந்துகொண்டு பார்வையில் குறைபாடு காணப்பட்ட 145 பேரில் 100 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் க.இராசதுரை முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு மூக்குக்கண்ணாடிகளை வழங்கினார்.

(203-207)

## பருத்தித்துறையில் சமூக அபிவிருத்தி மண்டபம்

பருத்தித்துறை,நவ.16

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவில் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் சமூக அபிவிருத்தி மண்டபம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இச்சமூக அபிவிருத்தி மண்டபம் வெகு விரைவில் நிர்மாணிக்கப்படுமென வடகிழக்கு மாகாண கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்ட பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(203-218)

## ஆயுள்வேத எண்ணெய் வகை தட்டுப்பாடு

கட்டைவேலி,நவ.16

கரவெட்டி அரசினர் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தில் ஆயுள்வேத எண்ணெய் வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் உள்ள இவ்வைத்தியசாலையில் நோய்களுக்குத் தேவையான எண்ணெய் வகைகள் இன்மையால் நோயாளர்கள் புலோலியில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை ஆயுள்வேத மத்திய மருந்தகத்தை நாடி வருகின்றனர்.

(203-2[illegible])


## கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமால் (BIMAL) ஆயுள்வேத மருந்துகள்

★ அரிஷ்ட வகைகள் ★ ஆசவ வகைகள்
★ வாசகா சிறப் ★ லேகிய வகைகள்
★ குளிசை வகைகள் ★ சூரண வகைகள்
★ குவாத வகைகள் ★ கல்க வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

Manufactured By:
BIMAL OSU(PVT) LIMITED,
KOLONNAWA,
SRILANKA.

வட மாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகில்).

(சி/54024)


உ
ஸ்ரீராம ஜெயம்

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

மங்களமிகு சர்வசித்து வருஷ ஐப்பசி மாத அபரபக்க சதுர்த்தசியில் வியாழக்கிழமையன்று பிரம்மஸ்ரீ அப்பாசாமி சர்மாவின் மனைவி

### அப்பாசாமிசர்மா ஞானேஸ்வரி அம்மா

இறைவனடி சேர்ந்தார். அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் கார்த்திகை 2ஆம் நாள் (18.11.2007) ஞாயிற்றுக்கிழமை தசாகம் முற்பகல் நடைபெறும். இந்நிகழ்விலும் கார்த்திகை 5ஆம் நாள் (21.11.2007) புதன்கிழமை சமாராதனையிலும் வருகை தந்து அன்னாரைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*மேற்படி கிரியைகள் மட்டுவில்*
*பிரம்மஸ்ரீ ஞானம் உபாத்தியாயரால் நடத்தப்படும்.*

கும்பிட்டான்
பிள்ளையார் கோயிலடி,
வரணிவடக்கு, வரணி. (67953)

வி.அப்பாசாமிசர்மா (கணவர்),
பிள்ளைகள்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ
19 ★ 12 ★ 1978



விண் நெகிழ
07 ★ 10 ★ 2007

போகவில் அகால மரணமான
அமரர்

### பரமநாதன் உதயவண்ணன் (சுரேஸ்)

எம் செல்வமே,
நாள்கள் நாற்பத்தொன்றும் - ஓடிப்போனதோ
ஆறுமோ எம் நெஞ்சம் -
அன்பின் அடைக்கலமாய் - பாசத்தின் உறைவிடமாய்
அவனி போற்ற வாழ்ந்தவனே, இனி நாம்
வாழ்ந்திடும் காலமெல்லாம் - உன் அன்பு முகத்தை மறப்போமா?
மீண்டும் வந்து எமக்குள் பிறந்திடமாட்டாயா.

அன்னாரின் இல்லத்தில் இன்று (16.11.2007) வெள்ளிக்கிழமை ந.ப.12 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக.

*விழிசுட்டி,*
*சங்கானை மேற்கு.* (சி/54371)

*உன் பிரிவால் கதறும்:*
குடும்பத்தினர்.

## சாவகச்சேரி நகரசபை

01.01.2008 முதல் 31.12.2008 வரை இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

1.கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 30.11.2007 நண்பகல் 12 மணி
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 10.12.2007 முற்பகல் 10 மணி
3.கேள்வி திறக்கப்படும் திகதி : 10.12.2007 முற்பகல் 11 மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற்வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம்(மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 1 | ஆட்டிறைச்சிக்கடை NMS II | 165,000.00 | 1,000.00 | 500.00 |
| 2 | மாட்டிறைச்சிக்கடை NMS IV | 240,000.00 | 1,000.00 | 500.00 |
| 3 | கோழி இறைச்சிக்கடை 1 | 125,000.00 | 1,000.00 | 500.00 |
| 4 | கோழி இறைச்சிக்கடை 2 | 125,000.00 | 1,000.00 | 500.00 |

*குறிப்பு:*

- இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விடுக்கப்படும் மாத வாடகைகளைச் செலுத்த வேண்டும்.
- கேள்விப் பத்திரக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரி (VAT) மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையைக் கொண்டுவர வேண்டும்.
- மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
14.11.2007 (சி/54369)

திருமதி கு.ஆறுமுகம்
*செயலாளர்,*
*நகரசபை, சாவகச்சேரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சர்வதேசக் கண்காணிப்பு முறைமையை வற்புறுத்தும் நிகழ்வுப் போக்குகள்

''இலங்கையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை காணாமற் போதலும் படுகொலைகளும் தொடரவே செய்யும்.'' - என்று ஒப்புக்கொண்டிருக்கின்றார் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா.

பிரிட்டிஷ் செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வி நிகழ்ச்சி ஒன்றிலேயே அவர் இதனை ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

இந்தப் பேட்டி நிகழ்ச்சியில் அவர் தெரிவித்த கருத்துகளும், நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இலங்கையின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்துகளும், இவ்விவகாரங்களை ஒட்டி பலதரப்பினாலும் - குறிப்பாக சர்வதேச தரப்புகளினால் - வற்புறுத்தப்பட்டு வரும் ஓர் அம்சத்தை நியாயப்படுத்துவதை நாம் அவதானிக்க முடியும்.

தலைநகர் கொழும்பு உட்பட பல்வேறு இடங்களிலும் ஆள்கள் மர்மமான முறையில் - வகைதொகையின்றி - கடத்தப்படுகின்றார்கள்; படுகொலை செய்யப்படுகின்றார்கள். இதுகுறித்து பாரதூரமான குற்றச்சாட்டுகள் மனித உரிமை அமைப்புகளினாலும் ஆர்வலர்களினாலும் முன்வைக்கப்படுகின்றன. மக்கள் கண்காணிப்புக்குழு போன்ற அமைப்புகள் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமற் போன ஆட்களின் பட்டியலையே விளக்கமாக - விஸ்தாரமாக - வெளியிட்டு வருகின்றன.

ஆனால் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பது போல அப்படி கடத்தல்களோ, படுகொலைகளோ இடம்பெறவேயில்லை என - அரசுத் தரப்பின் சராசரிப் பிரமுகர் போல - கருத்து வெளியிட்ட இராணுவத் தளபதி, பின்னர் ஏதோ சாக்குப் போக்குக்கு அவ்விடயங்களை மேம்போக்காக ஒப்புக்கொண்டிருக்கிறார். பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை இவை தொடர்வது தவிர்க்க முடியாதது என்று நியாயப்படுத்த முயல்கிறார் அவர்.

மோசமான மனித உரிமை மீறல் குற்றச் செயல்களில் ஈடுபடும் படையினருக்குக் குற்றப் பொறுப்பிலிருந்து சட்ட விலக்களிப்பு வழங்கும் விசேட சிறப்புரிமை ஏற்பாடுகள் இலங்கையில் நடைமுறையில் இருப்பதே இப்பிரச்சினைகள் தொடர்வதற்குக் காரணம் என்று சர்வதேச மட்டத்திலேயே விசனம் தெரிவிக்கப்படுகிறது.

'பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும்வரை படுகொலைகளும், காணாமற் போதலும் தொடரவே செய்யும்' - என்று இராணுவத் தளபதி குறிப்பிடும் இந்தச் செயற்பாட்டுக்கு, அவல நிலைக்கு, இப்படி குற்றப் பொறுப்பிலிருந்து சட்டவிலக்களிப்பு வழங்கும் விசேட சிறப்புரிமை வசதியே அடிப்படைக் காரணம் என்பதைப் புரிந்து கொள்வது அப்படி ஒன்றும் சிக்கலானதல்ல.

அதேசமயம், ஆள்கடத்தல்கள், படுகொலைகள் சம்பந்தமாக பொலிஸ் நிலையங்களிலோ அல்லது அதுபோன்ற வேறு அமைப்புகளிலோ முறையான முறைப்பாடுகள் இல்லை என்றும் கண்கண்ட சாட்சிகளும் இல்லை என்றும் வாதிடுகிறார் இராணுவத் தளபதி.

ஆனால் உள்ளூர் மனித உரிமை அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும், அரசியல் தலைவர்களும் - குறிப்பாக இச்சிக்கல்களில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுபான்மையினரான தமிழர்களின் தலைவர்களும் - வேறுவிதமாகக் கூறுகின்றார்கள். அவர்கள் கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல்கள், படுகொலைகள் என்று மிக மோசமான மனித உரிமை மீறல்கள் அரசுப் படைகளின் ஆதரவுடன் தொடர்கின்றன என்று ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்கள். இப்பிரச்சினையில் பந்தாடப்பட்டு, பயங்கரமான அனுபவங்களை எதிர்கொண்டு அல்லாடும் தமிழர்களின் கருத்து நிலைப்பாடும் அதுவே.

ஆக, 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பதுபோல அத்தகைய அராஜக அத்துமீறல்கள் இடம்பெறவில்லை என்று அரசும் அதன் படைத் தரப்பும்தான் கூறி வருகின்றன.

அதேசமயம், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக - ஒருதலைப்பட்சமாகவும் பக்கச்சார்பாகவும் - செயற்படுகின்றன என்று வசவு பாடியிருக்கின்றார் இலங்கையின் தேசிய பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

இலங்கை அரசின் மீதே இந்த சர்வதேச அமைப்புகள் குற்றச்சாட்டுகளை அடுக்கி வருகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் அப்பட்டமாக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை - சம்பவங்களை - இவை மூடி மறைத்து விடுகின்றன என்றும் அவர் திட்டித் தீர்த்திருக்கின்றார்.

இலங்கையில் மனித உரிமை அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டுவது போல மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்வேயில்லை என்று இராணுவத் தளபதி கிளப்பும் சர்ச்சையாக இருக்கட்டும் -

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றன என அமைச்சர் கெஹலிய கூக்குரலிட்டு குற்றஞ் சாட்டும் சர்ச்சையாக இருக்கட்டும் -

இரண்டையுமே நீதியாகத் தீர்ப்பதற்கு எது அவசியம்? இரண்டு சர்ச்சைகளின் பின்னாலும் புதைந்து கிடக்கும் உண்மைகள் வெளிவந்தால் சர்ச்சைகள் தானாகவே தீர்ந்துவிடும். அவற்றுக்கு முடிவு வந்துவிடும். அவை நியாயமாகத் தீர்க்கப்பட்டுவிடும்.

இவ்விடயங்களில் சர்வதேச சமூகம் உண்மைகளைக் கண்டறிவதற்கு எது அவசியம்? என்ன தேவை?

இங்கு இடம்பெறும் மோசமான மனித உரிமை மீறல் பிரச்சினைகளை நேரடியாகக் கண்காணித்து, விசாரித்து, விடயங்களைக் கண்டறிந்து, அறிக்கையிடும் அதிகாரத்துடன் இங்கு ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்பின் கண்காணிப்புப் பொறிமுறை ஒன்று இருப்பதே அத்தியாவசியமான விடயமாகும்.

அதற்கு அனுமதிக்க இலங்கை அரசு முன்வருமானால் இத்தகைய சர்ச்சைகளுக்குத் தானோகவே தீர்வு கிட்டிவிடும். உண்மைகள் அம்பலமாகிவிடும்.

உண்மைகள் அம்பலமாகக் கூடாது என்பதற்காகத்தான் நாட்டின் இறைமை என்ற பெயரில் இத்தகைய சர்வதேசக் கண்காணிப்புக்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு மறுபுறத்தில் நியாயமற்ற சர்ச்சைகளை அரசுப் பிரதிநிதிகள் கிளப்பிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது சர்வதேசத்துக்கும் இன்று பரகசியமாக - வெளிப்படையாக - புரியத் தொடங்கி இருக்கின்றது.

# தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதம் அல்ல; தங்களை அழிவில் இருந்து மீட்கும் விடுதலைப் போர்

## பிரபாவை அழித்தாலும் அது தொடரும் என்கிறார் மாவை

கொழும்பு,நவ.16

''தமிழ்ச்செல்வனைக் கொன்றது போல் பிரபாகர னைக் கொன்றொ ழித்தாலும் கூட தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தடையின்றித் தொடரும். தமிழ் மக்களின் இந்தப் போராட்டம் பயங்கரவாதம் அல்ல. இது தமிழர்களை அழிவில் இருந்து மீட்கும் விடுதலைப் போராட்டம். இப்போராட்டம் ஒருபோதும் ஓயாது.''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷ தனது வரவு - செலவுத் திட்ட உரையின் முதல் பகுதியிலேயே பயங்கரவாதத்தை ஒழிப்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களைப் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டெடுக்க பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லாப் போராட்டங்களையும் பயங்கரவாதம் என்று கூறி ஒரே கூடைக்குள் அத்தனையையும் ஒன்றாகப் போடக்கூடாது.

தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம் பயங்கரவாதம் அல்ல. 50 வருடங்களாக எமது மக்கள் அழிக்கப்பட்டு - அடிமைப்படுத்தப்பட்டு - வந்தார்கள். அந்த அழிவில் இருந்து தங்களை மீட்கவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தினர்.

இந்தப் போராட்டத்திற்கு ஒரு லட்சியம், ஓர் இலக்கு இருக்கின்றது. இது தமிழ் மக்களை அழிவில் இருந்து மீட்கும் போராட்டம். இதைத் தோற்கடிக்க முடியாது.

ஆனால், தொடர்ந்தும் யுத்தம் மூலம் தமிழ் மக்களை அழிப்பதற்காகத்தான் இதனைப் பயங்கரவாதம் என்று அரசு சொல்கின்றது.

### அரசியல் தீர்வை வைக்காது விலகுவதே அரசின் திட்டம்

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வைக்கப்படுவதில் இருந்து விலகி கொள்வதே அரசின் திட்டம்.

தமிழ் மக்கள் அனைவரையும் அழித்துவிட்டு அதன் பின்னர் அரசியல் தீர்வை முன்வைக்க அரசு முயன்றால் அது வெற்றியளிக்காது.

பாகிஸ்தான் விமானிகளுடன் சேர்ந்து, உக்ரைன் நாட்டு விமானிகளுக்கு இலங்கையில் பயிற்சி கொடுத்து அவர்கள் ஊடாகப் பிரபாகரனைக் கொலை செய்யத் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக இந்திய இராணுவ ஆய்வாளர் சி.ராமன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்ச்செல்வனைக் கொலை செய்தமைபோல், பிரபாகரனைக் கொலை செய்தாலும் தமிழ் மக்களின் இந்த விடுதலைப் போராட்டம் தடையின்றித் தொடரும்.

இராணுவத் தீர்வு என்ற பெயரில் சிங்கள இளைஞர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு மடிகின்றனர்.



அரசியல்வாதிகளின் பிழையான வழிகாட்டல்கள் காரணமாக இந்த இளைஞர்கள் மரணமாகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் 4 லட்சத்து 13ஆயிரம் பேர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். கிழக்கிலும் அப்படியே. அவர்களின் மீன்பிடி மற்றும் விவசாயம் போன்ற தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அதற்கான தீர்வு ஏதும் இல்லை. மாவிலாறு விவசாயிகளுக்கு நஷ்டஈடு கொடுத்த அரசு, வடக்கு - கிழக்கில் பல வருடங்களாகத் தொழில்களை இழந்துள்ள மக்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கவில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டம் செல்லுபடியற்றது.

இதேசமயம், கிழக்கில் பொத்துவிலில் உள்ள முஸ்லிம்களின் பகுதிகளை அரசு தீவிரமாக சிங்களமயமாக்கி வருகின்றது.

இந்த அரசு முன்னெடுத்துச் செல்லும் - தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான - நடவடிக்கைகள் என்றும் வெற்றியளிக்கா.

தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி - அவர்களைக் கொன்று குவித்ததன் பின்னர் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைப்பதை நாம் ஏற்கமாட்டோம். - என்றார். (சி)

# நாடாளுமன்றை காலவரையறையின்றி ஒத்திவைத்து 'கோப்' அமைப்பை செயலிழக்க வைக்கச் சதித்திட்டம்!

## அரசிலிருந்து விலகிய விஜயதாச ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, நவ.16

'ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டால் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படும். அப்படி ஒத்திவைக்கப்பட்டால் 'கோப்' அமைப்பு உட்பட அனைத்து நாடாளுமன்ற உபகுழுக்களும் செயலிழந்துவிடும். அதன் மூலம் ஏற்கனவே ஊழல் மோசடியில் சிக்கியுள்ள திருடர்களையும், மோசடிப் பேர்வழிகளையும் காப்பாற்றலாம் என அரசுத் தலைமை கருதுகிறது. அதனால்தான் இப்படியான சதித்திட்டம் ஒன்றை அரசு முன்னெடுக்கப்போகின்றது.''

- பொதுநிறுவனங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ('கோப்' அமைப்பின்)தலைவரும் நேற்று முன்தினம் அரசுப் பக்கத்திலிருந்து எதிரணிக்குத் தாவிய நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்றுக்காலை தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைப் போட்டுடைத்தார்.

வரவு - செலவுத்திட்டம், அதில் முன்வைக்கப்பட்டுள்ள பயனற்ற ஆலோசனைகள், நிதி வீண் விரயம் மற்றும் ஊழல் - மோசடிகள் ஆகியவை தொடர்பாக தனது அதிருப்தியை வெளிப்படுத்தி, நேற்றுமுன்தினம் எதிரணி வரிசையில் அமரும் வரை விஜயதாஸ ராஜபக்ஷ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடக்கம் ஆளும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் வரை அனைவருடனும் நெருக்கமாகப் பழகி வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஜயதாஸ ராஜபக்ஷ அரசுக்கு முன்வைத்துள்ள ஏழு நிபந்தனைகள் தொடர்பாக அரசிடமிருந்து இதுவரை உத்தியோகபூர்வமான பதிலோ அல்லது முடிவோ கிடைக்கவில்லை.

### மகிந்தவே பொறுப்பேற்கவேண்டும்

நேர்மையான, நம்பகத் தன்மையுடையதாகவும் என்னால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் அரசின் பதில் கிடைக்காதுவிட்டால் நான் வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிராகவே வாக்களிப்பேன். இன்னும் பலர் இந்த வரவு - செலவுத்திட்டத்தின் மீது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். 19 ஆம் திகதி இதன் எதிரொலி பல மாற்றங்களை ஏற்படுத்த இடமுண்டு.'' -

(08ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி இளைஞன் ஆணைக்குழுவில் சரண்

யாழ்ப்பாணம்,நவ.16

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து இளைஞன் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று சரணடைந்தார்.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு சரணடைந்துள்ளார். இவரை பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (அ-50)

## மணி மண்டபத்தில் பாரணை அன்னதானம்

யாழ்ப்பாணம்,நவ.16

கந்தசஷ்டி பூர்த்தியை முன்னிட்டு இன்று பாரணை அன்னதானம் காலை 8 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, வழமைபோல் வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் அன்னதான நிகழ்வும் நடைபெறும். (203)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 01 | சனிக்கிழமை 17.11.2007 |
| திதி : சப்தமி | மு.ப 11.37 - |
| நட்சத்திரம் : | திருவோணம் |
| [illegible] | [illegible] 10.00 |
| [illegible] | : 03.08 - 04.38 |
| ராகுகாலம் | : 09.08 - 10.38 |

## இணுவிலில் சமயதீட்சை

யாழ்ப்பாணம்,நவ.16

இணுவில் கந்தசாமி கோயில் இளந் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இன்று காலை 8மணிக்கு சமய தீட்சை வழங்கும் நிகழ்வு கந்தசாமி கோயிலில் நடைபெறவுள்ளது. (1-288)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,நவ.16

வலிகாமம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு-

* தெல்லிப்பழை யுத்யூனியன் விளையாட்டுக் கழக அணி எதிர் அராலி திருமகள் விளையாட்டுக் கழக 'பி' அணி.
* அராலி கலைவாணி விளையாட்டுக் கழக அணி எதிர் யாழ்ப்பாணம் குருநகர் சென்.றோக் விளையாட்டுக் கழக அணி. (1-86)

## சூரன் நகர் வலத்துக்கு குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம்,நவ.16

மேல் கட்டு இல்லாத துரவுக் கிணற்றில் குளிக்கச் சென்ற பாடசாலை மாணவன் நீரில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவம் நேற்று மிருசுவில், தவசிகுளத்தில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சிறிதரன் விஜயேந்திரன்(வயது 12) என்னும் மாணவனே மரணமானவராவார்.

கந்தசஷ்டி இறுதி நாளான நேற்று சூரன்போருக்கு முன்னோடியாக சூரன் நகர் வலம் செல்லும் நிகழ்வில் பங்குபற்றுவதற்காகக் குளிக்கச் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (அ-1-78-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவிலிருந்து ரட்ணதிலக ஆளும் தரப்புக்கு!

# அதைக் கடுமையாக எதிர்க்கிறார் அமைச்சர் டிலான்

கொழும்பு,நவ.16

எம்.பிக்கள் அணி தாவும் படலத்தில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட எம்.பியான மஹிந்த ரட்ணதிலக ஆளும் தரப்புக்குப் பாய்ந்தார்.

அவருக்கு ஆளும் தரப்பில் இடமளித்திருப்பதைக் கடுமையாக ஆட்சேபித்திருக்கும் நீதி அமைச்சர் டிலான் பெரேரா, இதுவிடயத்தில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருக்கின்றார்.

மஹிந்த ரட்ண திலக நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அரசுக்கான தமது ஆதரவைத் தெரியப்படுத்தினார்.

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் நாலந்தா எல்லாவெல படுகொலை தொடர்பாகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தவர் ஐ.தே. கட்சிப் பிரமுகரான மஹிந்த ரட்ணதிலக. அவரை ஆளும் தரப்புக்குள் உள்வாங்கியமை அமைச்சர் டிலானை சீற்றமுற வைத்திருக்கின்றது.

''திருடர்களையும், கொலைக் குற்றம் சுமத்தப்பட்டவர்களையும் உள்வாங்குவதன் மூலம் ஆளும் தரப்பு தவறிழைத்துள்ளது. இந்நிலையில் ஆளும் தரப்பை ஆதரித்து நாடாளுமன்றில் வாக்களிப்பதா என்பது குறித்து நான் ஆழமாகச் சிந்தித்து - ஒன்றுக்கு இரண்டு தடவை யோசித்து - முடிவு செய்வேன். தவறானோரை உள்வாங்கியமையை எதிர்த்து கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்கிறேன்.'' - என்று நேற்றுத் தமது பதவி துறப்புக் கடிதத்தில் டிலான் தெரிவித்திருந்தார் என அறியவந்தது. (சி)

## அரசுடன்சேரும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்கிறார் மகேஸ்வரன்

கொழும்பு,நவ.16

தமிழ் மக்கள் சார்பாக தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பேன். அரசுடன் சேரப்போகின்றேன் என்பது வெறும் கட்டுக்கதை. அந்த எண்ணமே எனக்கில்லை.

இப்படிக் கூறுகிறார் கொழும்புமாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன்.

அரசுடன் அவர் சேரப் போவதாக வெளிவந்த செய்திகள் குறித்துக் கருத்துக்கூறிய மகேஸ்வரன் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நீண்டகால நண்பன் நான். கடந்த பத்துஆண்டுகளாக மிக நெருங்கி அவருடன் பழகினேன்.

அவர் ஜனாதிபதியாகிய பின்னர் எனக்கும் அவருக்கும் இடையிலான உறவுகள் மிகவும் குறைவடைந்து விட்டன.

நான் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்டேன்.

இருதடவைகள் யாழ்.மாவட்டத்திலும் மூன்றாவது தடவை கொழும்பு மாவட்டத்திலும் தமிழ்மக்களால் தெரிவுசெய்யப்பட்டேன்.

தமிழ்மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு பாத்திரமாக நான் செயற்படுவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழ் அரசியல் வாழ்க்கையை நான் ஆரம்பித்தேன். என்னுடைய அரசியல் பயணத்தை ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்வதே எனது முடிவு - என்றார் அவர். (அ-1-சி)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த அரிசி மூடைகள் பறிமுதலாகின

தூத்துக்குடி,நவ.16

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படும் 2 ஆயிரத்து 500 மூடை அரிசியை பறிமுதல் செய்திருக்கும் சுங்கத்துறை அதிகாரிகள், வெளிமாவட்டங்களிலிருந்து தூத்துக்குடிக்கு அரிசியைக்கொண்டுவர பயன்படுத்தப்பட்ட நான்கு லொறிகளையும் கைப்பற்றியுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

தூத்துக்குடி துறைமுக புறவழிச் சாலையில், மீன்வளக் கல்லூரி அருகேயுள்ள தனியார் கிட்டங்கிக்கு லொறிகள் மூலம் அரிசி மூடைகள் கடத்திக்கொண்டு வரப்படுகின்றன என சுங்கத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, அத்துறை அலுவலர்கள் புதன்கிழமை மாலை அந்தக் கிட்டங்கியில் திடீர் சோதனை நடத்தினர். அப்போது அந்த கிட்டங்கியில் நின்ற லொறிகளில் ஆயிரத்து 750 அரிசி மூடைகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

மேலும், கிட்டங்கியில் 750 அரிசி மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த இரண்டாயிரத்து 500 மூடை அரிசியையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அரிசி மூடைகளை ஏற்றி வந்த லொறிகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த மூடை அரிசியின் வெளிச் சந்தை மதிப்பு 15 லட்சம் ரூபா. லொறிகளின் மதிப்பு 40 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

### தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் கிளைகள் பிரிட்டன், ஆஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, மலேசியா, நெதர்லாந்து, நியூசிலாந்து நோர்வே, தென்னாபிரிக்கா, சுவீடன், சுவிற்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய பதினேழு நாடுகளில் இயங்குகின்றன. - என்று தனது நீண்ட அறிக்கையில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

### கப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகர்கள் மற்றும் ஆண்கள், பெண்கள் ஆகிய எல்லோரினது பாதுகாப்புக்காகவும் படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதன் பயனை மக்கள் அனுபவிக்கவேண்டும். கஷ்டப்பட்டுத் தேடிய நகை, பணம் பெறுமதியான பொருள்களை எந்தவொரு நபரும் கொள்ளையடித்து அனுபவிக்க அனுமதிக்கக்கூடாது.

உங்களிடம் அல்லது அயலவரிடம் யாராவது கப்பம் பெற முயற்சித்தால் அல்லது இடைஞ்சல்களை ஏற்படுத்தினால் அருகில் உள்ள படை முகாம்களின் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்கவும்.

வலிகாமம் - 2222267, 2223398, வடமராட்சி, தென்மராட்சி - 2263145, 2263370, தென்மராட்சி தென்பகுதி - 2263146, 2264373, 2264619 ஆகிய இலக்கங்களுக்கு தகவல் கொடுக்கவும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

### மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மூதூரில் தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்கள் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படவில்லை - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (1)

### தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கும் தகவல் அனுப்பியுள்ளோம். உரிய வேளையில் வந்து சேருவார் என எதிர்பார்க்கின்றோம்.'' - என்று பதிலளித்தார் அந்த சிரேஷ்ட தலைவர்.

''இந்த அரசு கவிழ்வதில் உங்களின் வன்னி மாவட்ட எம்.பி. ஒருவருக்கு விருப்பமில்லை என்றும், அதனால் திங்களன்று வாக்கெடுப்பு சமயம் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதிலிருந்து தவிர்ப்பதற்காக அவர் சபைக்கு சமுகம் தராமல் நழுவிவிடுவார் என்று பேச்சடிபடுகின்றதே......?'' - என அவரிடம் கேட்டோம்.

''அப்படி ஒன்றும் இல்லை. இது யுத்த பட்ஜெட். தமிழர்களுக்கு எதிரான போர் வெறித்திட்டத்தின் பிரதிபலிப்பு. இதை எதிர்ப்பதில் நாம் அனைவரும் உறுதியாக இருக்கிறோம்.'' - என்று அந்த சிரேஷ்ட தலைவர் பதிலளித்தார். (சி)

### சந்திரிகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கப் போவதாக பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம் என அறிவித்துள்ள பின்னணியில் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடனாவது அதை நிறைவேற்றுவதில் அரசுத் தரப்பு மிகுந்த இக்கட்டை சந்தித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசுப் பக்கத்திலிருக்கும் அதிருப்தியாளர்களான எம்.பிக்களை தம்பக்கம் இழுப்பதன் மூலம் திங்களன்று வாக்கெடுப்பில் அரசைத் தோற்கடிக்க பிரதான எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றன.

அதை முறியடித்து, எதிர்த்தரப்பிலிருந்து கணிசமானோரை அரசுப் பக்கம் கவர்ந்திழுக்க அரசுத் தலைமையும் மும்முரமாக முயற்சிப்பதாகத் தெரிகின்றது.

இப்படி எம்.பிக்களைக் கவர்ந்திழுக்கும் குதிரையோட்டம் சூடு பிடித்திருக்கும் சூழ்நிலையில் அரசுப் பக்கத்தில் உள்ள - முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆதரவாளர்கள் - இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது அதிருப்தியை சூடாக வெளிப்படுத்தத் தயாராகி வருகின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

தமது ஆதரவாளர்களான எம்.பிக்களை பின்னணியில் நின்று இயக்கும் முயற்சியில் சந்திரிகா குமாரதுங்க முழு ஈடுபாட்டுடன் பங்குபற்றுகின்றார் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

அணி மாறக்கூடிய எம்.பிக்கள் எனத் தெரிவித்து சுமார் ஒரு டசின் உறுப்பினர்களின் பெயர்கள் நேற்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபட்டன. (சி)

### நாடாளுமன்றை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

என நேற்றுக் குறிப்பிட்டார் விஜேதாஸ ராஜபக்ஷ.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த வரவு - செலவுத்திட்டம் ஒரு யுத்த பட்ஜெட். பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்து ஒன்றும் இல்லை. அதேவேளை, வடக்கு - கிழக்கில் யுத்தத்தை நடத்திக்கொண்டு தென்பகுதி மக்களைப் பட்டினி போடுவதை மனிதாபிமானம் உள்ளவர்கள் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

இன்று நாட்டில் பயங்கரவாதம் உச்சநிலையை அடைந்தமைக்கு மஹிந்த ராஜபக்ஷவும் பொறுப்பேற்க வேண்டும்.

ஆறுமாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என 'மஹிந்த சிந்தனை' யில் அவர் கூறியுள்ளார்.

முப்பது வருடம் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு உடன் தீர்வு காண முடியாது என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இந்த ஆறுமாத காலத்திற்குள் ஏதேனும் உருப்படியான ஒரு தீர்வுத்திட்டத்தையாவது முன்வைத்திருக்கலாம். ஜனாதிபதிக்கு இனப்பிரச்சினையை தீர்க்கும் நோக்கமே இல்லை.

**சர்வதேச சமூகத்தை முட்டாள்களாக்கும் நோக்கம் கொண்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு**

நாட்டு மக்களையும், சர்வதேச சமூகத்தையும் முட்டாள்களாக்கி ஏமாற்றுவதற்காக ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டதுதான் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு

இந்தக் குழு சட்டவிரோதமானது. சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்ல அது. ஒரு சாதாரண மரண சகாய சங்கம் போன்றதே இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு.

இந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஏதாவது ஆலோசனை களை மட்டுமே முன்வைக்கலாமே தவிர வேறு எதையும் செய்ய முடியாது. அங்கு முன்வைக்கப்படும் ஆலோசனையை நாடாளுமன்றமே அக்குவேறு ஆணி வேறாக ஆராய்ந்து பரிசீலனை செய்யவேண்டும்.

அந்தக் குழுவின் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இல்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் தமிழர் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இருக்கின்றனர்.

எனவே, சகல அதிகாரங்களையும் கொண்ட நாடாளுமன்றத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்து உருப்படியான தீர்வு ஒன்றை ஏற்படுத்த முயற்சித்திருக்க முடியும். ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷ அதைச் செய்யவில்லை - என்றும் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார். (சி)


**English Literature**
**G.C.E. (O/L) Seminar**
24th Nov., 1st Dec. and 2nd Dec
From 9.00 a.m to 3 pm
(covers Complete Sylabus)
For Limited Numbers
Contact :
K.Subramanium
No. 62, Palam Road,
Kantharmadam, Jaffna.
(67916)


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கந்தசாமி



**(இளைப்பாறிய அதிபர், யாழ்.கம்பர்மலை வித்தியாலயம், கொம்மாந்தறை)**

இமையாணன் மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாவும் கொண்ட இராமலிங்கம் கந்தசாமி 15.11.2007 புதன் கிழமை முற்பகல்10.45மணியவில் காலமாகி விட்டார்.

அன்னார் இராமலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் ஏகாம்பரம் - அபிராமி தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற யோக்கியம், பரிமளம், செல்லமுத்து,பரமசாமி (இளைப்பாறிய தாதியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநாயகியின் அன்புக்கணவரும் பேரின்பசிவம்(நிலஅளவை உதவியாளர் - யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற கோபாலசிவம், ஸ்ரீஸ்கந்தராணி (ஜேர்மனி),பரதசிவம்(சிறைச்சாலை உத்தியோத்தர் - யாழ்ப்பாணம்), ஸ்ரீசிவராணி (ஆசிரியை,யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தை யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.11.2007) சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

*போக்காலைவீதி,*
*உடுப்பிட்டி.*


புதிய வகுப்புகள் ஆரம்பம்
**CB Computer Academy**
Station Road, Kondavil. 021-4590291
17.11.07 (Sat)
Diploma in Office Management (Ms Office)
Diploma in Computerized Accounting
Diploma in Computer Hardware



**2007 O/L மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

காலம் : 18.11.2007
இடம் :- மானிப்பாய் பிரதேச சபை மண்டபம்
நேரம் :- காலை 8.30
பாடம் - ஆங்கிலம் , கணிதம்
(பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்கள்)
அனைத்து மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்
ROTARACT CLUB OF JAFFNA MID TOWN



**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna
*Nothing is Impossible*
Biology Examination - 01

| இல | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 01 | சுந்தரராசா தனுராஜ் | 79 |
| 02 | கஜனி நித்தியானந்தராசா | 74 |
| 03 | தீபனா இராசதுரை | 72 |
| 04 | சிவகுருநாதன் விஜித் | 72 |
| 05 | சிந்துரேகா லோகேஸ்வரன் | 68 |
| 06 | ஜனனி குமாரசாமி | 66 |
| 07 | கோபாலரத்தினம் சுகாந்தன் | 64 |
| 08 | கிருத்திகா மகேந்திரன் | 63 |
| 09 | ஜான்சி சுப்பிரமணியம் | 63 |
| 10 | மகாலிங்கம் அருளினியன் | 63 |

பரீட்சைக்கு தோற்றியோர் : 126
ஆசிரியர் : சு.பொன்திவாகரன்
பரீட்சை தொடர்ந்தும் நடைபெறும்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org